පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

தரம் 09

**ஆண்டிறுதிப் பரீட்சை - 2018**

பாடசாலையின் பெயர் : ..........................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ..........................................

..........................................

நேரம் : 02 மணித்தியாலம்

## செயன்முறைத் தொழிநுட்பத்திறன்
## பகுதி I

- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ❖ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. அலங்காரத் தாவரங்களின் வேர்த் தொகுதி மத்தியில் உள்ளவாறு உருண்டையாக தயாரித்து தொங்க விடுவதற்கு அல்லது மேசையின் மீது வைப்பதற்கு ஏற்றவாறு மேற்கொள்ளப்படும் வளர்ப்பு முறை எவ்வாறு அழைக்கப்படும்.
   i. ஒட்டுமுறை ii. இழையவளர்ப்பு iii. கோக்கிடாமா iv. பொன்சாய் (Bonsai)

02. மண்ணரிப்பை தடுப்பதற்கு மூடு பயிர்கள் நடப்படும். அவ்வாறு நடப்படும் மூடுபயிர் பின்வருவனவற்றுள் எது?
   i. பியுரேரியா ii. தென்னை iii. தேக்கு iv. வாழை

03. அதி கூடிய தாவரப் புரதம் அடங்கிய உணவு வகை
   i. சோறு ii. சோயா அவரை iii. சோளம் iv. உருளைக்கிழங்கு

04. பின்வருவனவற்றுள் வெறுப்பூட்டும் தாவரம் எது?
   i. செவ்வந்தி ii. ரோசா iii. அந்தூரியம் iv. தாமரை

05. வட மாகாணத்தில் அதிகளவு காணப்படும் உணவு வகை எது?
   i. தேயிலை, தென்னை ii. பனை, ஏலம்
   iii. பனை , சின்ன வெங்காயம் iv. கோப்பி , வாழை

06. மனித நாக்கின் அடிப்பகுதியில் உணரக் கூடிய சுவை எது?
   i. உவர்ப்பு ii. இனிப்பு iii. புளிப்பு iv. கசப்பு

07. பின்வரும் பொதியிடு பதார்த்தங்களில் இயற்கைப் பொதியிடு பதார்த்தம் எது?
   i. பன்புல்லால் ஆன பெட்டி ii. தகரப்பேணி
   iii. பிளாத்திக்குப் பெட்டி iv. பொலிதீன் உறை

08. பின்வரும் உணவுகளில் இலிப்பிட்டு அதிகமாக உள்ள உணவு வகை எது?
   i. பாண் ii. பாற்கட்டி iii. சோறு iv. தோடம்பழம்

09. கடினமான இழையமைப்பைக் கொண்ட உணவு வகை எது?
   i. கேக் ii. ஜெலி iii. பழப்பானம் iv. விசுக்கோத்து

10. கடன் வசதி, ஏனைய கொடுக்கல் வாங்கல்களைப் பெறுவதற்கு பொருத்தமான இடம்
i. பாடசாலை
ii. நகரசபை
iii. பிரதேச செயலாளர் அலுவலகம்
iv. வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள்

11. வாகன என்ஜின்களிலிருந்து வெளிவிடப்படும் எவ்வாயு காரணமாக சூழல் மாசடைதல் நடைபெறும்
i. ஒட்சிசன், காபனீரொட்சைட்டு
ii. காபனீரொட்சைட்டு, நைத்திரிக் ஒட்சைட்டு
iii. ஐதரசன் , ஒட்சிசன்
iv. ஒட்சிசன் , நைத்திரிக் ஒட்சைட்டு

12. பல்லாண்டுத் தாவரங்களின் கிளைகள் , வேர்களை நீண்ட காலமாக கத்தரித்து அலங்காரமான சிறிய தாவரம் பெறப்படும் முறை எது?
i. பின்னல் வேலைப்பாடுகள்
ii. பொன்சாய்
iii. கோக்கிடாமா
iv. பதிவைத்தல்

13. பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்றை தெரிவு செய்க.
i. இலங்கையின் சர்வதேச தரக்கட்டளை நிறுவனம் ISO ஆகும்.
ii. நாம் போசணை உள்ள உணவுகளை உண்ண வேண்டும்.
iii. யோகட் பாலுற்பத்திப் பொருள் அல்ல
iv. பால் ஒரு நிறையுணவாகும்

14. தற்போது இலங்கையில் ஊக்கமிக்க முயற்சியாளர்களாகக் கருதப்படுவோர்
i. ஆண்கள்
ii. பெண்கள்
iii. சிறுவர்கள்
iv. வயோதிபர்கள்

15. வெற்றிகரமான முயற்சியாளரின் பண்புகளில் ஒன்று
i. பொறுப்பேற்றும் தன்மை
ii. சுயநலம் பேணல்
iii. இலாபத்தினை மாத்திரம் கருத்திற் கொள்ளல்
iv. முன்னாயத்தமின்றி செயற்படல்

❖ பின்வருவனவற்றிற்கான குறியீடுகளை வரைக.

16. சூழலுக்கு உவப்பானது -

17. மீள்சுழற்சி -

18. மின்கலம் -

19. மின்குமிழ் -

20. LED -



Education NCP - www.edncp.lk
Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) (i) சாடிகளில் நாட்டி தொங்க விடக் கூடிய பயிர்கள் நான்கு தருக.

(ii) வரையறுக்கப்பட்ட இடங்களுக்குப் பொருத்தமான பயிர்ச் செய்கை முறைகள் நான்கு தருக.

(iii) காடுகளை அழிப்பதனால் ஏற்படும் பாதிப்புக்கள் நான்கு தருக.

(iv) கிழக்கு மாகாணத்தில் அதிகளவில் காணப்படும் உணவு வகைகள் நான்கு தருக.

(v) உராய்வு நீக்கிகளாகப் பயன்படுத்தக் கூடிய இரண்டு பொருட்களின் பெயர் தருக.
($4 x 5 = 20$புள்ளிகள்)

02) (i) உயிர்த் திணிவு என்றால் என்ன? உதாரணம் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

(ii) விவசாய வனச் செய்கை என்றால் என்ன? (3 புள்ளிகள்)

(iii) பீடைகளை கட்டுப்படுத்தும் இரசாயனமல்லாத (ஒன்றிணைப்பு) பீடைக் கட்டுப்பாட்டு முறைகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

03) (i) உணவுடன் தொடர்புடைய கைத்தொழில்களின் நிலைத்திருப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

(ii) சுட்டுத் துண்டொன்றில் கட்டாயம் அடங்க வேண்டிய விடயங்கள் 4 தருக. (4புள்ளிகள்)

(iii) உணவு பல்வகை என்றால் என்ன? (2 புள்ளிகள்)

04) (i) செயற்றிட்டம் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

(ii) செயற்றிட்டத்தில் அடங்கும் விடயங்கள் 4 தருக. (4 புள்ளிகள்)

(iii) செயற்பாடொன்றை திட்டமிட்டு செய்வதன் நன்மைகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

05) (i) கையடக்கத் தொலைபேசியின் பிரயோகங்கள் நான்கு தருக.. (4 புள்ளிகள்)

(ii) சந்தை கேள்வியை அதிகரிப்பதற்கான நிருமானங்களின் கவர்ச்சித் தன்மையை அதிகரிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

(iii) முயற்சியாண்மையாளர்கள் சிற்றளவு வணிகத்தில் அதிக கவனஞ் செலுத்துவதற்கான காரணங்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

06) (i) சிற்றளவு வணிக முயற்சியாளர் ஒருவரது வணிக நடவடிக்கைகளின் வெற்றிக்கு உதவி புரியும் பல வகையான சேவைகள் உள்ளன. அவ்வகையான சேவைகள் துணைச் சேவைகள் எனப்படும். அவற்றில் நான்கு துணைச் சேவைகளின் பெயர்களைத் தருக.
(4 புள்ளிகள்)

(ii) முற்காலத்தில் நீர் நிலைகளுக்குச் சென்று நீரை எடுத்து வந்த மனிதர்கள் தற்போது எம்முறைகளைப் பயன்படுத்தி நீரைப் பெற்றுக் கொள்கின்றனர்.
(2 புள்ளிகள்)

(iii) தற்போது சந்தையில் காணப்படும் மின் விளக்கு வகை நான்கினை பெயரிடுக..
(2 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page